# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஏப்பிறல் மாதம் 8 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

## 2011 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 6 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.கூட். 17/2009

### இலங்கை செமட்ட செத மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

முன்னுரை.

"இலங்கை செமட்ட செத மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொது மக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

இலங்கை செமட்ட செத மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை செமட்ட செத மன்றத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "இலங்கை செமட்ட செத மன்றம்" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்ப துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத்தொடுக்கலாமென்பது டன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

2-PL 004995 -990 (2010/07)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) இடப்பரப்பில் வாழும் வறிய குடும்பங்களின் பொருளாதாரத் தரத்தை மேம்படுத்துதலும் நிதி நிலைமைகளை மேம்படுத்துவதன்மூலம் அத்தகைய குடும்பங்களின் வறுமையைத் தணித்தலும் ;

(ஆ) வறிய குடும்பங்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தி அவற்றின் உயர்தரத்தைப் பேணுவதற்கு அரசாங்க செயற்பாடுகளுடன் ஒத்திசைதல் ;

(இ) இடப்பரப்பிற்குள் சூழல் பாதுகாப்பு சார்ந்த செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தல் ;

(ஈ) ஊட்டச்சத்துப் புனர்வாழ்வு தொடர்பான செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தலும் இடப்பரப்பிற்குட்பட்ட வறியவர்களினதும் அநாதரவானவர்களினதும் ஊட்டச்சத்தின் மட்டத்தை மேம்படுத்துதலும் ;

(உ) வேறு எந்த ஒழுங்கமைப்புகளுடன், மத மற்றும் கலாசார நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் அவசியமானதென மன்றம் கருதுகின்றதோ அந்த எவையேனும் ஒழுங்கமைப்புகளுடனும் மத மற்றும் கலாசார நிறுவனங்களுடனும் ஒத்திசைவான செயற்பாடுகளில் சேர்ந்து கொள்ளல் ;

(ஊ) உதவி தேவைப்படும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு புத்தகங்கள், கருவிகள், கடன்கள் மற்றும் நிதியுதவி வழங்குதலில் துணைபுரிதல் ;

(எ) மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு நிதியமொன்றைத் தாபித்தலும் அதனை ஒழுங்குபடுத்துதலும்.

(2) மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துகையில் அத்தகைய நடைமுறைப்படுத்துகை இனம், குலம், மதம், மொழி, பால்நிலை அல்லது அரசியல் அபிப்பிராயம் என்பவற்றின் அடிப்படையிலான ஏதேனும் பாகுபாடில்லாமல் மேற்கொள்ளப்படுவதை கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்கு இடப்பரப்பு என்பது எந்தப் புவியியல் இடப்பரப்பிற்குள் இலங்கை செமட்ட செத அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்தப் புவியியல் இடப்பரப்பு எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய –

(அ) கூட்டுத்தாபனத்துக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்கெடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையில் பாராதீனப்படுத்தல், பாரபந்தத்துக்குட்படுத்தல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்மூலமோ செய்துகொள்ளுதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) காசாக அல்லது பொருளாகக் கொடைகளையும் நன்கொடைகளையும் அன்பளிப்புகளையும் ஏற்றுக் கொள்ளுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனம் உகந்ததெனக் கருதும்முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்புடனும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக பணத்தை முற்பணமாகக் கொடுத்தலும் அல்லது கடன் கொடுத்தலும், பணத்தை கடனாகப் பெறுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் நிதிகளை முதலீடுசெய்தலும் நம்பிக்கைப்பொறுப்புக்களை உருவாக்குதலும் நிருவகித்தலும் ஏதேனும் வங்கியில் நடைமுறை, வைப்பு அத்துடன் சேமிப்புக் கணக்குகளைப் பேணு தலும் ;

(ஊா) நூல்களையும், சஞ்சிகைகளையும், பருவவிதழ்களையும் ஏனைய இலக்கியங்களையும் வெளியிடுதல் அல்லது வெளியிடுவித்தல் அத்துடன் நூலகங்கள், புத்தகக்கடைகள், அச்சகங்கள் போன்றவற்றைத் தாபித்தலும் பராமரித்தலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடம்மாற்றுதல், அவர்களின் மீது ஒழுங்காற்றுக் கட்டுப்பாடு பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவிநீக்குதலும், அவர்களின் சேவைக்காலத்தையும் நிபந்தனைகளையும் விதித்துரைத்தலும் ; அத்துடன்

(ஏ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானதும் இடைநேர் விளைவானதும் அல்லது விரும்பத்தக்கதுமான ஏனைய எல்லாச் செயல்களையும் புரிதல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய பதவிதாங்குநர்களையும் அத்தகைய விதிகளில் ஏற்பாடுசெய்யப்படக்கூடியவாறும் அதற்கிணங்கவும் தெரிவு செய்யப்படக்கூடியவர்களுமான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களையும் கொண்ட முகாமைச்சபை (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் மன்றத்தின் முகாமைச்சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. *(1)* காலத்துக்குக்காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மைகொண்டு பின்வரும் எல்லா அல்லது ஏதேனும் விடயங்களுக்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், பதவி விலகல் அல்லது விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும், அவர்களின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் ;

(இ) சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும், அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் அத்துடன் சபை உறுப்பினர்களின் பதவிக்காலமும் அத்துடன் சபை உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர் என்போரின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(உ) சபையின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அக்கூட்டங்களில் அனுசரிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரல்களும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் மற்றும் அதில் கருமமாற்றுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவில் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதை போன்ற அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**7.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளரினதும் அத்துடன் செயலாளரினதும் அல்லது பொருளாளரினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அத்தகைய கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்ப மிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட வுள்ளனவும் கூட்டுத்தாபனத் திற்குச் செலுத்தப்படற் பாலனவுமான தனிசுகள்.*

**8.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளதான மன்றத்தின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இதனால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக இதற்கு முன் அல்லது இதனகத்துப்பின்னர் அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையில் பெறப்படும் பணங்கள் யாவும் சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களை யும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட

ஏதேனும் செலவினத்தை கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படுத் தப்பட்ட எல்லா பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப் படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டா தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத் தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய் வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) "இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பின ராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத் தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத் தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவகம் அல்லது நிறுவகங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர் களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ள னவோ அந்த வேறேதும் நிறுவகமாக அல்லது நிறுவகங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையுமான வேறேதேனும் நிறுவகத்திற்கு அல்லது நிறுவனங்களிற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவகங்கள் கூட்டுத்தாபனத்தின் கலைப்பின்போது அல்லது கலைப்பிற்கு உடன்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோர் களினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமை களையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்